**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 159/2019**

**Deposition of Witness for : PW.1**

| | |
|---|---|
| **Name** | : திருமதி சாரதா |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11-02-2021.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது ஐய்யம்பாளையம் புதூர் வேலாயுதம் கொட்டா கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சிகள், நிரோஷா, நிஷாந்தி ஆகியோரை தெரியும். சாட்சிகள் சாந்தி, அண்ணாமலை, பலராமன், அன்பழகன், பச்சையப்பன் ஆகியோர்கள் எனது ஊர்காரர்கள். ஆஜர் எதிரி சங்கர் எனது கொழுந்தனார். எனது கணவர் பெயர் தேவேந்திரன், அவர்களுடன் பிறந்தவர்கள், ஏழுமலை, சங்கர், ஆறுமுகம் மற்றும் கார்த்தி. எனது கணவருக்கும், அவரது சகோதரர்களுக்கும் பொதுவாக 10 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தில் நீர் இறைப்பது சம்மந்தமாகவும், பயிர் வைப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. அதிகமாக எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு வந்தது. அனைருவக்கும் பொதுவான ஏர் கலப்பையை எனது கணவர் எடுத்து வந்து எங்கள் வீட்டில் வைத்திருந்தார். 9.6.2018ந் தேதி மாலை 6.30 மணியளவில் 1ம் எதிரியின் மகனான 2ம் எதிரி எடுத்து சென்று அவருடைய நிலத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்திருந்தார். பிறகு என் கணவர் இரவு வீட்டிற்கு வந்து ஏர் கலப்பை எங்கே என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் மணிகண்டன் வந்து எடுத்து சென்றுவிட்டார் என்று சொன்னேன். பொதுவான கலப்பையை மணிகண்டன் ஏன் எடுத்து சென்றார் என்று சொல்லிவிட்டு இரவு நேரம் என்பதால் பிரச்சனை வேண்டாம் என்று மறுநாள் காலை போய் பேசிக் கொள்ளலாம் என்று நான் சொன்னேன். மறுநாள் காலை எனது கணவர் மணிகண்டன் எடுத்து சென்ற ஏர் கலப்பையை மீண்டும் வாங்கி வரச்சென்றார். அப்போது 2ம் எதிரி மணிகண்டன் எங்களது கலப்பையை நீ எதற்காக எடுத்து சென்றாய் அது எங்களுடையது

என்று சொல்லி எனது கணவரின் தலையில் மூங்கில் கொம்பால் அடித்தார். ஆஜர் எதிரி மரக்கட்டையால் என் கணவரின் பின் தலையில் அடித்தார். காட்டப்படும் மரக்கட்டை சா.பொ.1. அதனால் உடனே என் கணவர் மயங்கி கீழே விழுந்து விட்டார். எனது கணவரின் வாயிலும், மூக்கிலும் வாந்தி வந்தது. அப்போது அங்கு பக்கத்து நிலத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் எனது குடும்பத்தை சேர்ந்தவர்களும் அங்கு இருந்தோம். உடனே எனது மூத்தார் ஏழுமலை எடுத்து வந்த காரில் என் கணவரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது கணவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்து விட்டார் என்று சொல்லி எனது கணவரின் பிரேதத்தை மார்சுவரிக்கு அனுப்பி வைத்தார். பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த விவரத்தை சொல்ல என் மகள் நிரோஷா புகாரை எழுதினார். காட்டப்படும் புகார் அ.சா.ஆ.1. பிறகு என் கணவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் கொடுத்தார்கள். எனது கணவரின் பிரேதத்தை எங்களது ஊரிலேயே அடக்கம் செய்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை

ஒம்/- சாரதா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 159/2019**
**Deposition of Witness for : PW.2**

| | |
|---|---|
| **Name** | **:** திருமதி. நிரோஷா |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11-02-2021.**

**முதல் விசாரணை** -

நான் ஐய்யம்பாளையம் புதூர் வேலாயுதம் கொட்டா கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பி.ஏ., ஆங்கிலம் 3ம் ஆண்டு திருவண்ணாமலை சண்முகா கலைக் கல்லூரியில் படித்து வருகிறேன். எனக்கு பெங்களூரைச் சேர்ந்த நடராஜன் என்பவருடன் 2019ம் ஆண்டு திருமணம் நடந்தது. அ.சா.1 எனது அம்மா, சாட்சிகள் நிஷா, நிஷாந்தி எனது சகோதரிகள், சாட்சிகள், சாந்தி, பலராமன், அண்ணாமலை, அன்பழகன், பச்சையப்பன் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரி எனது சித்தப்பா. என் தகப்பனார் பெயர் தேவேந்திரன். 9.6.2018ம் தேதி ஏர் ஓட்டுவதற்காக அனைவருக்கும் பொதுவான ஏர் கலப்பையை என் தந்தை தேவேந்திரன் எடுத்து வந்து எங்கள் வீட்டில் வைத்திருந்தார். அன்று மாலை 2ம் எதிரி மணிகண்டன் எங்கள் வீட்டிற்கு வந்து ஏர் ஓட்ட வைத்திருந்த ஏர் கலப்பையை அவருடைய வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டார். என் தகப்பனார் வேலை முடித்து வந்து ஏர் கலப்பையை கேட்டார். என் தாயார் மணிகண்டன் எடுத்து சென்றுவிட்டதை கூறி தற்போது கேட்கவேண்டாம் மறுநாள் காலை கேட்டுக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார். மறுநாள் காலை என் தந்தை சென்று ஏர் கலப்பை கேட்டதற்கு மணிகண்டனும், சங்கரும் "ஓத்தா தேவிடியா பையா என்று கெட்ட வார்தையால் திட்டினார்கள். அப்போது சண்டை ஏற்பட்டதால் நான், அ.சா.1 மற்றும் எனது 2 சகோதரிகள் நிஷா, நிஷாந்தி ஆகியோர் தடுக்க சென்றோம். மணிகண்டன் என் தந்தை நிஷாந்தியை அடித்து கால்வாயில் தள்ளினார். எதற்காக என் மகளை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு மணிகண்டன் மூங்கில் கொம்பால் என் தந்தையின் மண்டை பக்கவாட்டில் அடித்தார். அதற்கு என் அப்பாவும் அடித்ததால் ஆத்திரமடைந்த

ஆஜர் எதிரி சங்கர் தடியால் என் அப்பாவின் பின் மண்டையில் அடித்தார். காட்டப்படும் சா.பொ.1 ஐ கொண்டு தான் அடித்தார். உடனே என் தகப்பனார் மயங்கி விழுந்து விட்டார். மூக்கிலும், வாயிலும் வாந்தி வந்தது. உடனே என் பெரியப்பாவுக்கு போன் செய்து வரவைத்தோம். அவர் காரில் வந்து என் தகப்பனாரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அங்கே என் தகப்பனார் பரிசோதனை செய்து இறந்து விட்டதாக கூறினார்கள். பின்னர் என் தகப்பனாரின் பிரேதத்தை மார்ச்சுவரிக்கு கொண்டு சென்றார்கள். என் தாயார் காவல் நிலையம் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தார். அந்த புகாரை அ.சா.1 சொல்ல நான் எழுதினேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை

ஒம்/- நிரோஷா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 159/2019**

**Deposition of Witness for : PW.3**

**Name** : திருமதி. நிஷா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11-02-2021.**

**முதல் விசாரணை** -

நான் ஐய்யம்பாளையம் புதூர் வேலாயுதம் கொட்டா கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பி.எஸ்சி., 2ம் ஆண்டு திருவண்ணாமலை அரசு கல்லூரியில் படித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா, அ.சா.2 எனது மூத்த சகோதரி சாட்சிகள் நிஷாந்தி எனது இளைய சகோதரி, சாட்சிகள், சாந்தி, பலராமன், அண்ணாமலை, அன்பழகன், பச்சையப்பன் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரி எனது சித்தப்பா. என் தகப்பனார் பெயர் தேவேந்திரன். என் தகப்பனார் விவசாயி. என் தகப்பனார் உடன் பிறந்தவர்கள் ஏழுமலை, சங்கர், ஆறுமுகம் மற்றும் கார்த்தி. அனைவருக்கும் பொதுவான ஏர் கலப்பையால் என் தந்தைக்கும், ஆஜர் எதிரிக்கும் சண்டை நடந்தது. 9.6.2018ம் தேதி ஏர் ஓட்டுவதற்காக அனைவருக்கும் பொதுவான ஏர் கலப்பையை என் தந்தை தேவேந்திரன் எடுத்து வந்து எங்கள் வீட்டில் வைத்திருந்தார். அன்று மாலை 2ம் எதிரி மணிகண்டன் எங்கள் வீட்டிற்கு வந்து ஏர் ஓட்ட வைத்திருந்த ஏர் கலப்பையை அவருடைய வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டார். என் தகப்பனார் வேலை முடித்து விட்டு இரவு 8 மணிக்கு வந்து ஏர் கலப்பை எங்கே என்று என் தயாரிடம் கேட்டார். மேலும் இரவு நேரம் என்பதால் எதுவும் கேட்கவேண்டாம் என்றும் மறு நாள் காலை சென்று கேட்டுக் கொள்ளலாம் என்று அ.சா.1 கூறினார். மறுநாள் காலை 9 மணியளவில் நாங்கள் என் தந்தையுடன் பூ பரித்து விட்டு நிலத்தை உழ்வதற்காக ஏர் கலப்பையை வாங்கி வர என் தந்தை மாட்டு தொழுவத்தில் வைத்திருந்த ஏர் கலப்பையை எடுக்க சென்றார். அப்போது 2ம் எதிரி எதற்காக ஏர் கலப்பையை எடுக்கிறாய் என்று சொல்லி வாக்குவாதம் செய்தார். அதற்கு என் தந்தை

அனைவருக்கும் பொதுவான ஏர்கலப்பை தானே என் நிலத்தை உழுதுவிட்டு தருகிறேன் என்று கேட்டதற்கு 2ம் எதிரி என் தந்தையிடம் வாக்குவாதம் செய்தார். அப்போது நான் என் தந்தைக்கும் 2ம் எதிரிக்கும் நடந்த வாக்குவாதத்தை விளக்கிவிட சென்றேன். அப்போது 2ம் எதிரியும் அவரது தம்பியும் என்னை அடித்து கீழே தள்ளி விட்டார்கள். அதனால் நான் பயந்து ஓரமாக ஒதுங்கிக் கொண்டேன். எதற்காக என் மகளை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு மணிகண்டன் நான் அப்படி தான் அடிப்பேன் என்று கூறி மூங்கில் கொம்பால் என் தந்தையின் மண்டை பக்கவாட்டில் அடித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் மூங்கில் கொம்பால் தான் என் தந்தையை 2ம் எதிரி அடித்தார். அதை பார்த்துக் கொண்டிருந்த ஆஜர் எதிரி இதோடு ஒழிந்துபோ என்று பெரிய மரக் கட்டையால் என் தந்தையின் பின் மண்டையில் ஓங்கி அடித்து விட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 ல் தான் ஆஜர் எதிரி என் தந்தையை தாக்கினார். உடனே என் தகப்பனார் மயங்கி விழுந்து விட்டார். மூக்கிலும், வாயிலும் பச்சை நிறத்தில் வாந்தி வந்தது. தகவல் தெரிந்து என் பெரியப்பா காரில் வந்து என் தகப்பனாரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அங்கே என் தகப்பனார் பரிசோதனை செய்த மருத்துவர் இறந்து விட்டதாக கூறினார், பின்னர் என் தகப்பனாரின் பிரேதத்தை மார்ச்சுவரிக்கு கொண்டு சென்றார்கள். என் தாயார் காவல் நிலையம் அ.சா.ஆ.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை

ஒம்/- நிஷா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 159/2019</u>**

**<u>Deposition of Witness for : PW.4</u>**

| | |
|---|---|
| **Name** | : செல்வி நிஷாந்தி |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : **17** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11-02-2021.**

<u>நீதிமன்ற கேள்வி</u>

| | |
|---|---|
| உன்னுடைய பிறந்த தேதி என்ன | - 28.04.2004 |
| தற்போது எங்கு நின்று கொண்டிருக்கிறாய் தெரியுமா | -ஆம் நீதிமன்றத்தில் |
| என்ன படித்து கொண்டிருக்கிறாய் | - நான் 11ம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவண்ணாமலையில் படித்து வருகிறேன். . |
| பொய்யுக்கும் உண்மைக்கும் வித்தியாசம் தெரியுமா | - தெரியும் |

For the aforesaid answer given by the witness, the court is satisfied that she is competent enough to tender evidence.

**<u>முதல் விசாரணை</u>** -

நான் ஐய்யம்பாளையம் புதூர் வேலாயுதம் கொட்டா கிராமத்தில் என் தாயாருடன் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா, அ.சா.2 மற்றும் 3 எனது சகோதரிகள், சாட்சிகள், சாந்தி, பலராமன், அண்ணாமலை, அன்பழகன், பச்சையப்பன் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரி எனது சித்தப்பா. என் தகப்பனார் பெயர் தேவேந்திரன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் நிலத்தை உழுவதற்காக ஏர் கலப்பையை என் தகப்பனார் வீட்டில் கொண்டு வந்து வைத்திருந்தார். அந்த ஏர் கலப்பையை அன்று மாலை மணிகண்டன் அதை எடுத்து சென்று அவரது வீட்டில் வைத்துக் கொண்டார். மறுநாள் காலை என் தகப்பனார் நிலத்தை உழுவதற்கு அந்த ஏர் கலப்பையை வாங்கி வர சென்ற போது மணிகண்டன் ஏர் கலப்பையை ஏண்டா

எடுக்கிறாய் என்று சொல்லி என் தந்தையை " ஓத்தா தேவிடியா பையா, இந்த ஏர் கலப்பை ஏன்டா உனக்கு" என்று சொல்லி திட்டினார். மேலும் ஆஜர் எதிரி என் தந்தையிடம் அடிக்கடி தகராறு செய்து அசிங்கமாக திட்டுவார். அப்போது 1, 2 எதிரிகள் என்னையும் எனது சகோதரிகளையும் அடித்தார்கள். எங்களை அடித்ததால் என் அப்பா மணிகண்டனிடம் ஏன் என் பிள்ளைகளை அடித்தாய் என்று கேட்டு பேசிக்கொண்டு இருக்கும் போதே மணிகண்டன் என் அப்பாவை கோலால் அடித்து விட்டார். ஆஜர் எதிரி என் தந்தையின் தலை பின் பகுதியில் கட்டையால் அடித்து விட்டார். அதனால் என் தந்தை மயங்கி கீழே விழுந்து விட்டார். என் தந்தைக்கு மூக்கிலும், வாயிலும் பச்சையாக வாந்தி வந்தது. பின்னர் தகவல் தெரிந்து என் பெரியப்பா வந்து என் தந்தையை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்றார். என் தந்தையை பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று கூறிவிட்டார்கள். என் தந்தையின் பிரேதத்தை பிறகு எங்கள் வீட்டில் எடுத்து வந்தார்கள். பிறகு நாங்கள் என் தாயாருடன் காவல் நிலையம் சென்றோம். அங்கு என் தாயார் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை

ஒம்/- நிஷாந்தி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.